டர்ந்து அந்த நம்பிக்கைக்கு ஒரு முடிவு கொண்டு வராத காரணத்தாலே, பாதிக்கப்பட்ட விவசாயிகள் நிவாரணம் கிடைக்கும், என்ற நம்பிக்கையோடு இருக்கிறார்கள். எனவே, அரசாங்கத்தைப் பொறுத்தவரை, அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு அறிக்கையை பரிசீலித்து, உடனடியாக நடவடிக்கை எடுத்து, அடுத்து, என்ன என்ன உதவிகள் விவசாயிகளுக்கு அளிப்போம் என்ற உறுதியோடு அரசு முன்வந்தால், கட்டாயமாக, விவசாயிகள் எந்தவித நடவடிக்கைக்கும் தயாராக இருப்பார்கள். எனவே, அரசு உயர்மட்டக் குழு அறிக்கைகளைப் பரிசீலித்து, உடனடியாக அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெள்ளத்தாலும், வறட்சியாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன, என்ன சலுகைகளும் முறைகளும் மேற்கொள்ளப்பட இருக்கின்றன மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்கொள்ள இருக்கிறார்கள் என்பதைப் பற்றிய விவரக் குறிப்புகளை நான் ஏற்கெனவே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். அது மட்டுமல்லாமல், நிலவரியைப் பொறுத்தவரையில், 1931-லே வகுத்த வரியினுடைய அளவைத் தவிர, அதற்குப் பிறகு, ஏற்றமே இல்லை. வேறு எல்லாத் துறைகளிலும் ஏற்றம் இருந்தாலும் ஏற்றம் இல்லாத ஒரே துறை இதுதான். ஆனாலும், நான் முதலிலே சொல்லியபடி, வசதி படைத்தவர்களிடமிருந்து அப்படிப்பட்ட பாக்கியிருக்கிறது. அவர்கள் தங்களுக்கும் சேர்த்து, வரி வஜா கிடைக்கும் என்ற அளவுக்கு நிறுத்தி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் சொல்கிறேனே தவிர, முடியாதவர்கள், நலிந்து போனவர்கள், மற்றவர்கள் பொறுத்து மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கையின் பேரில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) திருவில்லிப்புத்தூர் கோவில் கோபுரம் துலுக்கப்பட்டி சிமெண்ட் தொழிற்சாலையைப் புகையினால் பாதிக்கப் பெற்றுள்ளதாக கூறப்படுவது குறித்து.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''காமராஜர் மாவட்டம், ஆலங்குளம் மற்றும் துலுக்கப்பட்டி சிமெண்ட் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் புகையினால் திருவில்லிப்புத்தூர் கோயில் கோபுரம் பெரிதும் பாதிக்கப்படுவதால் அப்பகுதி மக்களிடையே நிலவும் கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திருவாளர்கள் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட், ஆலங்குளம் தொழிற்சாலை, காமராஜர் மாவட்டத்தில் இராசபாளையத்திற்கு அருகில் அமைந்துள்ளது. இத்தொழிற்சாலை 1970 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இத்தொழிற்சாலை மாதம் ஒன்றுக்கு 30,000 மெட்ரிக் டன் போர்ட்லண்ட் போஸலோனா சிமெண்ட்டும் மாதம் ஒன்றுக்கு 3,300 மெட்ரிக் டன் சாதாரண போர்ட்லண்ட் சிமெண்ட்டும் தயாரிக்கிறது. இத்தொழிற்சாலை ஈரமுறையில் சிமெண்ட் தயாரிக்கிறது. சிமெண்ட் தயாரிப்பதற்கு பிரதான மூலப் பொருள் சுண்ணாம்புக்கல் ஆகும். சுண்ணாம்புக்கல் தேவையான அளவுக்கு உடைக்கப்பட்டு கலவை மில்களுக்கு அனுப்பப்படுகிறது. அங்கு சுண்ணாம்புக்கல் கலவையாக்கப்பட்டு அக்கலவையானது சூளைகளில் எரியூட்டப்பட்டு கிளிங்கர் தயாரிக்கப்படுகிறது. தூளாக்கப்பட்ட நிலக்கரி எரியூட்டுவதற்குப் பயன்படுகிறது. பின்னர் கிளிங்கருடன் ஜிப்ஸம் சேர்க்கப்பட்டு சிமெண்ட் ஆலையில் தூளாக்கப்பட்டு சிமெண்ட் தயாரிக்கப்படுகிறது. இத்தொழிற்சாலையில் உள்ள இரண்டு சூளைகள் மற்றும் இரண்டு சிமெண்ட் மில்கள், தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றும் தூசுக்கு ஆதாரமாகும். இரண்டு சூளைகளுக்கும் பொதுவாக 60 மீட்டர் உயரத்தில் மாசுப் பொருட்களை வெளியேற்ற புகைபோக்கி அமைக்கப்பட்டுள்ளது. சிமெண்ட் மில்களிலிருந்து வெளிவரும் மாசுப் பொருட்களை வெளியேற்ற 18.5 மீட்டர் உயரமுள்ள புகை போக்கி அமைக்கப்பட்டுள்ளது. சூளைகளில் இருந்து வெளிவரும் மாசுப் பொருட்களைக் கட்டுப்படுத்த இத்தொழிற்சாலை ஒவ்வொரு சூளையிலும் எலெக்ட்ரோ ஸ்டாடிக் பிரிசிபிடேட்டர்களைப் பொருத்தியுள்ளது. சிமெண்ட் மில்லிலிருந்து வெளிவரும் மாசுப் பொருட்களைக் கட்டுப்படுத்த ஒரு சிமெண்ட் மில்லுக்கு இரண்டு தூசுத் தடுப்பான்கள் பொருத்தப்பட்டுள்ளன. சிமெண்ட் மில்களில் அமைக்கப்பட்டுள்ள நான்கு தூசுத் தடுப்பான்களும் எலெக்ட்ரோஸ்டாடிக் பிரிசிபிடேட்டர்களுடன் இணைக்கப்பட்டு மாசுப் பொருட்கள் வெளியேறுவது கட்டுப்படுத்தப்படுகிறது. 1981 ஆம் ஆண்டு காற்று (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் காற்று மாசுத் தடுப்பு எல்லைக்குள் தொழிற்சாலையை நடத்த மேற்படி தொழிற்சாலை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதல் கோரி விண்ணப்பித்திருந்தது. வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைக்குட்பட்டு தூசினை வெளியேற்ற வேண்டும் என்ற நிபந்தனையிட்டு மேற்படி தொழிற்சாலைக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

2. திருவாளர்கள் மெட்ராஸ் சிமெண்ட்ஸ் லிமிடெட், காமராஜர் மாவட்டத்தில் விருதுநகருக்கு அருகில் துலுக்கப்பட்டியில் அமைந்துள்ளது. இத் தொழிற்சாலை 1961 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இத்தொழிற்சாலை மாதம் ஒன்றுக்கு

40,000 முதல் 50,000 மெட்ரிக் டன் சிமெண்ட் தயாரிக்கிறது. இத்தொழிற்சாலை உலர் முறையில் சிமெண்ட் தயாரிக்கிறது. சிமெண்ட் தயாரிப்பதற்கு சுண்ணாம்புக்கல் பிரதான மூலப் பொருளாகும். உடைக்கப்பட்ட சுண்ணாம்புக்கல்லுடன் களி மண் கலக்கப்பட்டு தூளாக்கப்படுகிறது. பின்னர் தண்ணீர் சிறிதளவு சேர்க்கப்பட்டு இந்தத் தூள்கள் உருண்டைகளாக்கப்படுகிறது. இந்த உருண்டைகள் சூளைகளுக்கு அனுப்பப்பட்டு கிளிங்கராக்கப்படுகிறது. தூளாக்கப்பட்ட நிலக்கரி எரியூட்டுவதற்கு பயன்படுகிறது. பின்னர் கிளிங்கர்கள் ஜிப்ஸத்துடன் கலக்கப்பட்டு தூளாக்கப்பட்டு சிமெண்ட் தயாரிக்கப்படுகிறது. இத் தொழிற்சாலையிலுள்ள ஒரு சூளை மற்றும் இரண்டு சிமெண்ட் மில்கள் தொழிற்சாலை வெளியேற்றும் தூசுகளின் மூக்கிய ஆதாரமாகும். சூளைகளிலிருந்து வெளியேறும் மாசுப் பொருளை வெளியேற்ற 55.08 மீட்டர் உயரமுள்ள புகை போக்கி அமைக்கப்பட்டுள்ளது. சிமெண்ட் மில்களில் இருந்து வெளிவரும் மாசுப் பொருளகளை வெளியேற்ற ஒவ்வொரு சிமெண்ட் மில்லிலும் 20 மீட்டர் உயரமுள்ள புகை போக்கிகள் அமைக்கப்பட்டுள்ளன. இத் தொழிற்சாலை மாசுப் பொருட்களைக் கட்டுப்படுத்த சூளைப் பகுதியில் ஒரு எலெக்ட்ரோஸ்டாடிக் பிரிசிபிடேட்டரும் இரண்டு சிமெண்ட் மில்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு எலெக்ட்ரோஸ்டாடிக் பிரிசிபிடேட்டர்களையும் அமைத்துள்ளது. 1981 ஆம் ஆண்டு காற்று (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்படி காற்று மாசுத் தடுப்பு எல்லைக்குள் தொழிற்சாலை நடத்த மேற்படி தொழிற்சாலை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதல் கோரி விண்ணப்பித்திருந்தது. வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைக்குட்பட்டு தூசியை வெளியேற்ற வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் தொழிற்சாலைக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

3. திருவில்லிப்புத்தூரில் ஸ்ரீ ஆண்டாள் ஆலயம் மற்றும் ஸ்ரீ சிவன் ஆலயம் என்ற இரண்டு முக்கியமான ஆலயங்கள் உள்ளன. திருவாளர்கள் தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட், ஆலங்குளம் திருவில்லிப்புத்தூருக்கு தெற்கே 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. திருவாளர்கள் மெட்ராஸ் சிமெண்ட் லிமிடெட், துலுக்கப்பட்டி, திருவில்லிப்புத்தூருக்கு தென்கிழக்கில் 28 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

4. மேற்படி தொழிற்சாலைகள் ஆய்வு செய்யப்பட்டன. மேற்படி தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் தூசுகள் திருவில்லிப்புத்தூரில் உள்ள கோயில்களில் சென்றடையாது என்று தெரியவருகிறது. கோயில்களுக்கருகில் உள்ள பொது மக்கள் மற்றும் திருவில்லிப்புத்தூர் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளரையும் விசாரித்தபோது இது உறுதியாக்கப்பட்டது.

(1986 மே 13) (டாக்டர் : எச். வி. ஹண்டே)

5. மேற்படி தொழிற்சாலைகளில் மாசுக் கட்டுப்பாடு முறைகளின் முன்னேற்றம் குறித்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கண்காணித்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையை நன்றாகப் படித்துப் பார்த்தேன். படித்தவுடன் மிகவும் வருத்தம் அடைந்தேன். உலகத்திலேயே 7 அதிசயங்களில் ஒன்றாக தாஜ்மகால் இருக்கிறது. அதில் சுற்றுப்புற ஆபத்து ஏற்பட்டுள்ளது. எப்படி என்றால் வட இந்தியாவில் மதுரா எண்ணெய் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் தூசுகளினால் அந்த பளிங்கு கட்டிடத்திற்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது போன்று இந்த கோபுரத்திற்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. அந்த ஊரிலுள்ள பொது மக்கள் கோபுரம் இடிந்து போகக்கூடிய சூழ்நிலையில் இருப்பதால், அவர்கள் ஊரைவிட்டே வெளியே போகக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இங்கே ஏற்கனவே நமது மாண்புமிகு அமைச்சர் ஒரு விவர அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையில் 1970 ஆம் ஆண்டு ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளது, 1961 ஆம் ஆண்டு ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டு தான் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுத் துறையின் கீழ் அவர்கள் அனுமதி கேட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இன்னொன்றையும் சொல்கிறார்கள். திருவில்லிப்புத்தூர் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளரையும் விசாரித்திருக்கிறோம். இதனால் கோயிலுக்கு ஆபத்து இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நிச்சயமாக அந்த கோபுரத்திற்கு ஆபத்து இருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? இப்போது திருப்பணி நடக்க இருக்கிறது. திருப்பணி செய்வதற்கு வேண்டிய தொகையை அரசாங்க தொழிற்சாலைகளிலிருந்து, அரசு வாங்கித்தர முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே விவர அறிக்கையிலே தெளிவாக கருத்துகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. திருவில்லிப்புத்தூரில் ஸ்ரீ ஆண்டாள் ஆலயம் மற்றும் ஸ்ரீ சிவன் ஆலயம் என்ற இரண்டு முக்கியமான ஆலயங்கள் உள்ளன. திருவாளர்கள் தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட், ஆலங்குளம் திருவில்லிப்புத்தூருக்கு தெற்கே 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

என்று அந்த குறிப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இங்கிருக்கக் கூடிய சிமெண்ட் ஆலையிலிருந்து வரக்கூடிய சிமெண்ட் டஸ்ட்டினால் கோயில் பாதிக்கப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். பாதிப்பு இல்லை என்று அதிகாரிகள் கொடுத்திருக்கிறார்கள். இருக்கிறதா? இல்லையா? என்று நானே நேரடியாகச் சென்று, உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன். அதிகாரிகள் கொடுத்திருக்கக் கூடிய தகவல்கள் தவறு என்று உறுப்பினர் கூறுகிறார். தவறு இருக்குமானால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். அது மட்டுமல்லாமல் அந்த தொழிற்சாலையை நடத்தக் கூடியவர்கள் எலெக்ட்ரோஸ்டாடிக் பிரிசிபிடேட்டர்ஸ் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லி இருக்கிறோம். அவர்கள் உடனடியாக செய்வதாக கூறியிருக்கிறார்கள். உடனடியாக ஏற்படுத்தவில்லை என்றால் அவர்களுடைய அனுமதியை கூட ரத்து செய்வதற்கு அரசாங்கம் தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூர் ஸ்ரீ ஆண்டாள் கோபுரம் தமிழக அரசின் முத்திரை சின்னத்தை மாடலாகக் கொண்டது. இது தமிழ்நாடு சர்க்காருக்கு சவால் விட்டிருக்கிறது. தமிழ்நாட்டு மக்களே வருத்தப்படக் கூடிய விஷயம். இந்த கோபுர திருப்பணிக்காக தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், ஆர். எம். வி. அவர்கள் ஸ்ரீபெரும்புத்தூர் சாமி அவர்களும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இந்த கோவிலுக்கு, திருப்பணிக்கு ஒன்றரை இலட்ச ரூபாய் பல்வேறு நிதியிலிருந்து கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கத்திலிருந்து நஷ்ட ஈடு வேண்டும். 100 கோடி ரூபாய் நஷ்ட ஈடு வேண்டுமென்று கோர்ட்டிலே பக்தர்கள் சார்பில் வழக்கு தொடர்வதற்கு அனுமதி கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த கோவிலினுடைய பிரசித்தத்தைப் பற்றியும், வரலாற்றைப்பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார்கள். இந்த கோவில் தொன்மையான கோவில். பல முறை அந்த கோவிலுக்கு நான் சென்றிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினருடன் கூட சென்றிருக்கிறேன். அற்புதமான கோவில் என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. பக்தர்கள் வழக்கு கொண்டு வரலாமா என்று கேட்டார். பக்தர்கள் வழக்கு கொண்டு வருவதற்கு உரிமை இருக்கிறது. அதைத் தடுக்க முடியாது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இந்த கோவிலுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய கடமையை நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.